செய்தி வெளியீடு எண்: 356 நாள் : 03.07.2013

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தொடர் நடவடிக்கைகளின் காரணமாக 5.6.2013 அன்று இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட 49 மீனவர்கள் விடுவிக்கப்பட்டு தமிழகம் திரும்புகிறார்கள்.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 24 மீனவர்கள் 5 விசைப்படகுகளில் பாக் நீரிணைப்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது இலங்கை கடற்படையினரால் 5.6.2013 அன்று சிறைபிடிக்கப்பட்டு மன்னார் கொண்டு செல்லப்பட்டனர். பின்னர் அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். அன்றே இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மேலும் 25 மீனவர்கள் 5 விசைப்படகுகளில் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டு ஊர்க்காவல் துறை (kayts) தீவுப்பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டனர். பின்னர் அவர்கள் இலங்கை சிறையில் அடைக்கப்பட்டனர்.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 49 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டதை அறிந்தவுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் கடிதம் மூலம் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றார்கள். அந்தக் கடிதத்தில், தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவதற்கு தொடர்ந்து தமிழக அரசின் சார்பில் கடும் எதிர்ப்பு தெரிவித்து வரும்போதும், மத்திய அரசு எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்றும், தூதரக நடவடிக்கைகள் மூலம் இலங்கை அரசுக்கு எந்த நிர்பந்தத்தையும் ஏற்படுத்தாமல் மௌனம் காத்து வருகிறது என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். மேலும், இந்த அத்துமீறல் நடவடிக்கைக்கு மத்திய அரசு மிகக் கடுமையாக கண்டனம் தெரிவிக்க வேண்டும்

என்றும், டெல்லியில் உள்ள இலங்கை தூதரை அழைத்து இந்தியாவின் கடும் எச்சரிக்கையை தெரிவிக்க இந்திய வெளியுறவுத் துறைக்கு மாண்புமிகு பாரதப் பிரதமர் உத்தரவிடவேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் கோரியிருந்தார்.

இதுமட்டுமல்லாமல், இலங்கையில் உள்ள இந்திய தூதரகத்தை தொடர்பு கொண்டு சிறையில் அடைக்கப்பட்ட இந்திய மீனவர்களை விடுவிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி தமிழக அரசு அதிகாரிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உத்தரவினை அடுத்து இலங்கையில் உள்ள இந்திய தூதரகம் மூலம் சிறைபிடிக்கப்பட்ட 49 மீனவர்களை விடுவிக்க தமிழக அரசு அதிகாரிகள் தொடர்ந்து முயற்சி மேற்கொண்டனர். இதன் பயனாக இலங்கை கடற்படையினரால் கைது செயய்யப்பட்ட 24 மீனவர்கள் அனுராதபுரம் சிறையிலிருந்து 2.7.2013 அன்று விடுதலை செய்யப்பட்டனர். இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மேலும் 25 மீனவர்கள் இன்று (3.7.2013) ஜாப்ஃனா சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உறுதியான தொடர் நடவடிக்கையின் விளைவாக இலங்கை கடற்படையினரால் 5.6.2013 அன்று கைது செய்யப்பட்ட 49 மீனவர்கள் விடுதலை செய்யபட்டுள்ளனர். இன்னும் ஓரிரு நாட்களில் இவர்கள் அனைவரும் தமிழகம் திரும்புவார்கள்.

வெளியீடு : இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
நாள் : 3.07.2013